துக்கு இடமான விஷயம். ஸமீப வருஷங்களில் ஸிவில் சப்ளை இலாகா மட்டுமின்றி, இன்னும் பல இலாகாக்கள் பெருவாரியாக ஊதிவந்திருப்பது பலரும் அறிந்ததுதான். செலவு அதிகரிப்போடு, ஊழல் பெருகவும் இந்த ஊதல் காரணமாயிருந்து வந்திருக்கிறது. இவ்வகையில் விசேஷமான சிக்க னத்துக்கு இடமுண்டு. இதொருபுற மிருக்க, பஞ்ச நிவாரண வகையில் தாங்கள் செய்யும் செலவில் பாதியை உபகாரப் பணமாகக் கொடுக்குமாறு மத் திய சர்க்காரை இம்மாகாண அதிகாரிகள் வற் புறுத்தலாம். வேறு மாகாணங்களில் இத்தகைய நிலைமை ஏற்பட்டபோது நிவாரணச் செலவில் பாதியை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இந்த ஒரு இனத்தில் மட்டும் மத்திய சர்க்காரை நமது கோரிக்கைக்கு இணங்கச் செய்ய முடியு மானால் இங்கு மேற்கொண்டு வரியை உயர்த்த அவசியமிராது.

உண்மையில் இங்கு பல இனங்களிலும் வரியை எவ்வளவுதூரம் உயர்த்த முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்கெனவே உயர்த்தியாகிவிட்டது. முன் பிருந்த ஒரு முக்கியமான வருமான இன; அவசரப்பட்டுக் கைவிடாதிருந்தால் இப்பே வரிச் சுமையை அதிகரிப்பதுபற்றி சிந்திக்கவே தேவையிராது. இந்நிலையில் மேற்கொண்டு வரி விதிப்பதாயின் அது மிகவும் கவனமாக ஆராய வேண்டிய விஷயம். இப்போது குறிப்பாக பஸ் பிரயாணிகள் மீது விதிக்கப்படவிருக்கும் வரி ஏழை மக்களை மேற்கொண்டு வருத்தக்கூடியது. பெரிய நிலச்சுவான்தார்கள் கட்டும் நிலவரி மீது ஸர்சார்ஜ் விதிப்பது கொள்கையளவில் ஆட்சே பிக்கக்கூடியதல்ல. எனினும் இதையும், நில அபி விருத்தி வரியையும் பற்றிய விவரங்கள் தெரிந்த பின்பே திட்டமான அபிப்பிராயங்கள் உருவாகக் கூடும். ஆனால் ஜமீன்தார்களுக்கும், இனாம்தார் களுக்கும் கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டுக்காக மேன்மேலும் பொதுப் பணத்தை ஏன் அள்ளிவிட வேண்டுமென்பதுதான் நமக்கு விளங்கவில்லை. ஜமீந்தாரிகள், இனாம்தாரிகள் ஒழிப்பால் நேரடி யாக லாபமடையக்கூடியவர்கள் அப்பொறுப்பை ஏற்பதே நியாயமாகும்.